M **முதல் இடைப் பருவ பொதுத் தேர்வு - ஜூலை 2018**

மதுரை மாவட்டம் **பதினொன்றாம் வகுப்பு** பதிவு எண் [ ]

நேரம்: 1.15 மணி **கணக்குப்பதிவியல்** மதிப்பெண்கள்: 45

பிரிவு - அ

சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக: **10×1=10**

1) நிதிநிலைக் கணக்கின் அடிப்படையாக விளங்குவது
   அ) சமூகக் கணக்கியல் ஆ) மேலாண்மைக் கணக்கியல்
   இ) காரியதரிசிகளின் கணக்கியல் ஈ) பொறுப்பு கணக்கியல்
2) நிதித்தகவல்களின் அகப்பயனாளராகக் கருதப்படுபவர் யார்?
   அ) பணியாளர் ஆ) உரிமையாளர்
   இ) நிர்வாகம் ஈ) மேற்கூறிய அனைத்தும்
3) GAAP என்பது
   அ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கொள்கைகள்
   ஆ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் கோட்பாடுகள்
   இ) பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கியல் வழிமுறைகள்
   ஈ) இவற்றுள் ஏதுமில்லை
4) இந்தியாவில் கணக்கியல் தரநிலைகளை வழங்கும் அமைப்பு
   அ) இந்திய மையவங்கி
   ஆ) உச்சநீதிமன்றம்
   இ) இந்தியப் பட்டயக் கணக்காளர் நிறுவனம்
   ஈ) இந்திய அடக்கவிலை மற்றும் கணக்காளர் நிறுவனம்
5) கணக்கியல் சமன்பாடு எந்த கணக்கியல் கோட்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்டுள்ளது?
   அ) இரட்டைத்தன்மை ஆ) நிலைத்தன்மை
   இ) நிறுவனத்தொடர்ச்சி ஈ) நிகழ்வுத்தன்மை
6) உரிமையாளர் வருமான வரியை காசோலை மூலம் செலுத்தியது. இதில் பற்று வைக்கப்படும் கணக்கு ..................
   அ) ரொக்க க/கு ஆ) வங்கி க/கு
   இ) வருமானவரி க/கு ஈ) எடுப்பு க/கு
7) ஒரு கணக்கின் வரவு மொத்தத்தைவிட பற்று மொத்தம் அதிகமாக இருப்பின் அதன் பொருள்
   அ) வரவு இருப்பு ஆ) பற்று இருப்பு
   இ) இருப்பு இன்மை ஈ) பற்று மற்றும் வரவு இருப்பு
8) பற்று மற்றும் வரவு இனங்களை குறிப்பேட்டிலிருந்து பேரேட்டுக் கணக்குகளில் எடுத்து எழுதும் நடைமுறையை இவ்வாறு அழைக்கலாம்.
   அ) கூட்டுதல் ஆ) எடுத்தெழுதுதல்
   இ) குறிப்பேட்டில் பதிதல் ஈ) இருப்புக் கட்டுதல்
9) இருப்பாய்வு என்பது ஒரு
   அ) கணக்கு ஆ) அறிக்கை இ) பேரேடு ஈ) குறிப்பேடு

10) இருப்பாய்வில் பற்றுப்பத்தியின் மொத்தமும், வரவுப்பத்தியின் மொத்தமும் வேறுபட்டால் அதை எடுத்து எழுத வேண்டிய கணக்கு

அ) வியாபார க/கு ஆ) இலாபநட்ட க/கு

இ) அனாமத்து க/கு ஈ) இதர கணக்கு

பிரிவு - ஆ

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். அவற்றுள் வினா எண் 11க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:** **4×2=8**

11) பின்வருவனவற்றிற்கான ஏதேனும் ஒரு நடவடிக்கையைத் தருக.

அ) ஒரு சொத்து குறையும் போது, இன்னொரு சொத்து அதிகரித்தல்.

ஆ) ஒரு பொறுப்பு குறையும் போது, இன்னொரு பொறுப்பு அதிகரித்தல்.

12) நவீன வணிக உலகில் கணக்காளரின் பங்களிப்பு ஏதேனும் 4 தருக.

13) கணக்கேடுகள் பராமரிப்பை வரையறு.

14) இருப்பாய்வு தயாரிப்பதின் நோக்கங்கள் யாவை? (ஏதேனும் 2)

15) பின்வருவனவற்றை ஆள்சார் க/கு, சொத்து க/கு மற்றும் பெயரளவு க/கு என வகைப்படுத்துக.

(i) முதல் க/கு (ii) விளம்பரம் க/கு

(iii) SBI வங்கி க/கு (iv) கொள்முதல் க/கு

16) கணக்கியல் சமன்பாட்டினை நிரப்புக:

| | சொத்துக்கள் | = | முதல் | + | பொறுப்புகள் |
|---|---|---|---|---|---|
| i) | 6,00,000 | = | ? | + | 2,00,000 |
| ii) | ? | = | 3,50,000 | + | 1,50,000 |
| iii) | 1,10,000 | = | 60,000 | + | ? |
| iv) | 1,60,000 | = | ? | + | 75,000 |

பிரிவு - இ

**எவையேனும் 4 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும். அவற்றுள் வினா எண் 17க்கு கட்டாயமாக விடையளிக்கவும்:** **4×3=12**

17) வணிகத் தனித்தன்மை கருத்து பற்றி கூறுக. மேலும் இக்கருத்தின்படி முதல் ஒரு ...............

18) கணக்கியல் சுழலின் படிநிலைகள் யாவை?

19) கணக்கியலின் பொன்னான விதிகளைத் தருக.

20) ஆள்சார் கணக்குகள் எவ்வாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன? உதாரணம் தருக.

21) முருகன் என்பவருக்கு கடன் விற்பனை செய்தது ரூ. 50,000. இது தொடர்பான மாற்றுச்சீட்டு குறித்த நடவடிக்கைகளை குறிப்பேட்டில் பதிவு செய்க.

2017

ஏப்ரல் 12 முருகன் மீது எழுதிய ரூ. 50,000க்கான மாற்றுச்சீட்டினை அவர் ஏற்பு செய்தார்.

25 முருகனிடமிருந்து பெற்ற மாற்றுச்சீட்டு வங்கியில் தள்ளுபடி செய்தது ரூ. 49,000.

29 வங்கியில் கள்ளுபடி செய்க முருகனின் மாற்றுச்சீட்டு மறுக்கப்பட்ட

22) பின்வரும் நடவடிக்கைகளிலிருந்து அறைகலன் கணக்கைத் தயாரிக்கவும்.

| 2016 | | | ரூ. |
|---|---|---|---|
| ஜுன் | 1 | கையில் உள்ள அறைகலன் | 20,000 |
| | 5 | அறைகலன் வாங்கியது | 30,000 |
| | 22 | அறைகலன் விற்றது | 1,000 |

பிரிவு - ஈ

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்:** **3×5=15**

23) பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரம் செய்யும் பிரியதர்ஷினி அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

2017

மார்ச் 1 வியாபாரம் தொடங்க இட்ட முதல் ரூ. 60,000. சரக்கிருப்பு ரூ. 40,000

3 அறைகலன் வாங்கியது. இணைய வங்கி மூலம் செலுத்தியது ரூ. 10,000

7 கந்தனுக்கு சரக்கு விற்றது ரூ. 5,000

10 வேலிடமிருந்து சரக்கு வாங்கியது ரூ. 10,000. அதற்கான தொகையை பணம் வைப்பு இயந்திரம் மூலம் செலுத்தியது.

15 முதலீடுகள் மீதான வட்டி நேரடியாக வங்கியின் மூலம் வசூலிக்கப்பட்டது ரூ. 3,000

**(அல்லது)**

பின்வரும் நடவடிக்கைகளைக் கொண்டு கணக்கியல் சமன்பாட்டினை உருவாக்கவும்.

i) சிபானி ரொக்கம் ரூ. 30,000, சரக்குகள் ரூ. 40,000 மற்றும் வங்கியிருப்பு ரூ. 80,000த்துடன் தொழில் தொடங்கினார்.

ii) இராமனுக்கு விற்ற சரக்கின் மதிப்பு ரூ. 15,000-த்தில் 5,000 உடனடியாக பணமாகப் பெறப்பட்டது.

iii) பற்று அட்டையினைப் பயன்படுத்தி ரூ. 10,000க்கு அறைகலன் வாங்கப்பட்டது.

iv) ரூ. 10,000 மதிப்புள்ள சரக்குகள் ரூ. 15,000க்கு அருணாச்சலத்திற்கு விற்கப்பட்டது.

v) குமாரிடமிருந்து சரக்கு வாங்கியதற்கு பணம் வைப்பு இயந்திரம் மூலமாக செலுத்தப்பட்டது ரூ. 20,000.

24) பின்வரும் விவரங்களைக் கொண்டு தொடக்கப்பதிவை தந்து, பேரேட்டுக் கணக்கினைத் தயாரிக்கவும்.

2015

ஏப்ரல் 1 **சொத்துக்கள்**

ரொக்கம் ரூ. 40,000, சரக்கு ரூ. 50,000, இயந்திரம் ரூ. 30,000, கடனாளிகள் ரூ. 40,000.

**பொறுப்புகள்**

விஜயாவுக்கு செலுத்த வேண்டியது ரூ. 15,000

**(அல்லது)**

பின்வரும் நடவடிக்கைகளை திரு. ராஜ் அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்து பேரேட்டில் எடுத்தெழுதி இருப்பு கட்டுக.

| 2013 | | ரூ. |
|---|---|---|
| ஆகஸ்ட் 12 | லெட்சுமிக்கு சரக்கு விற்றது | 30,000 |
| 15 | லெட்சுமி திருப்பி அனுப்பிய சரக்கின் மதிப்பு | 6,000 |
| 20 | லெட்சுமியிடமிருந்து ரொக்கம் ரூ. 23,000 பெற்றுக்கொண்டு அவரது கணக்கு முடிக்கப்பட்டது. | |

25) பின்வரும் இருப்புகளைக் கொண்டு முத்துலெட்சுமி என்பவரது 31.3.2016 ஆம் நாளுக்குரிய இருப்பாய்வு தயார் செய்க.

| | ரூ. |
|---|---|
| முதல் | 3,00,000 |
| அறைகலனும் பொருந்துகைகளும் | 1,40,000 |
| வாராகடன் | 5,000 |
| காப்பீட்டு முனைமம் | 10,000 |
| முதலீடுகள் | 1,55,000 |
| எடுப்பு | 25,000 |
| வாராஜயக்கடன் ஒதுக்கு | 5,000 |
| வங்கிகடன் | 15,000 |
| காப்புநிதி | 10,000 |
| வங்கிமேல்வரைப்பற்று | 5,000 |

(அல்லது)

பின்வரும் நடவடிக்கைகளை ஜவுளி வியாபாரி திரு. பிரசன்னா அவர்களின் குறிப்பேட்டில் பதிவு செய்க.

| 2018 | | ரூ. |
|---|---|---|
| பிப்ரவரி 6 | சொந்த பயனுக்காக வங்கியிலிருந்து பணம் எடுத்தது | 60,000 |
| 9 | தொண்டு நிறுவனங்களுக்காக துண்டுகள் வழங்கியது | 5,000 |
| 12 | மாதிரிகளாக வழங்கிய சேலைகளின் மதிப்பு | 3,000 |
| 15 | சரக்குகள் (மேசை விரிப்புகள்) அலுவலகப் பயன்பாட்டிற்காக எடுத்துக் கொள்ளப்பட்டவை | 2,000 |
| 18 | பிரசன்னா தமது சொந்த பயன்பாட்டிற்காக சட்டைகள் எடுத்துக் கொண்டது | 15,000 |

----------